RNI-N0: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி

MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING · மாலை நாளிதழ்





சிவகங்கை | மலர்-4 | இதழ்-7 | 07 ஜனவரி செவ்வாய்க்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ.5

## பெங்களூருவில் 8 மாத குழந்தைக்கு எச்எம்பிவி தொற்று?

### கர்நாடக சுகாதார துறை விளக்கம்

பெங்களூரு, ஜன.7




பெங்களூருவில் 8 மாத குழந்தைக்கு எச்எம்பிவி தொற்று ஏற்பட்டதாக தகவல் வெளியான நிலையில் அது தொடர்பாக கர்நாடக சுகாதார துறை விளக்கம் அளித்துள்ளது. சீனா வில் ஹியூமன் மெட்டா நியூமோவைரஸ் (எச்எம்பிவி) வேகமாக பரவி வருகிறது. இதனை தீவிரமாக கண்காணித்து வருவதாகவும், இப்போதைக்கு இது குறித்து அச்சம் கொள்ளத் தேவையில்லை என்றும் மத்திய அரசு தெரிவித்துள்ளது.

இந்நிலையில் பெங்களூருவில் 8 மாத கைக்குழந்தைக்கு எச்எம்பிவி தொற்று ஏற்பட்டதாக தகவல் வெளியாகியுள்ளது. இது குறித்து மாநில சுகாதாரத் துறை வட்டாரம், "8 மாத குழந்தைக்கு எச்எம்பிவி தொற்று ஏற்பட்டதாக தனியார் மருத்துவமனை ஆய்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்தக் குழந்தையின் நோய் கண்டறிவதற்கான ரத்த / சளி மாதிரிகள் அரசு ஆய்வகத்தில் பரிசோதனை செய்யப்படவில்லை. அதேவேளையில் தனியார் மருத்துவமனையின் சோதனை முடிவுகளை தாங்கள் சந்தேகிக்க வேண்டிய அவசியமும் இல்லை. மாதிரிகளை புனேவில் உள்ள தேசிய ஆய்வகத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. சீனாவில் பரவும் எச்எம்பிவி வைரஸ் பற்றிய முழுமையான தரவுகள் நமக்கு இல்லை. அதனால் இப்போது பரிசோதிக்கப்பட்ட மாதிரியை ஒப்பிட்டுப் பார்த்து இரண்டும் மாதிரியானவையா என்று சொல்ல இயலவில்லை" எனத் தெரிவித்துள்ளது.

கர்நாடகாவின் சுகாதாரத் துறை முதன்மைச் செயலாளர் ஹர்ஷ் குப்தா இது குறித்து கூறுகையில், "பொதுவாகவே வயதுக்குக் கீழ் உள்ள குழந்தைகளை சோதித்தால் அதில் சுமார் 1 சதவீத சேம்பிள்களில் எச்எம்பிவி தொற்று உறுதியாகும். எனவே இது முதல் பாதிப்பாக இருக்க வேண்டிய் அவசியமில்லை. முன்னதாக சோதனைகள் செய்யப்படாததால் தெரியாமல் இருந்திருக்கலாம். எச்எம்பிவி தொற்றும் மற்ற சுவாசப்பாதை வைரஸ் தொற்றுகள் போன்றதே. அதனால் பீதி அடையத் தேவையில்லை. இது சிறுவர்கள், முதியவர்களுக்கு குளிர் காலத்தில் பாதிப்பை ஏற்படுத்தக்கூடியது." என்றார்.

முன்னதாக சனிக்கிழமை கர்நாடக சுகாதார துறை வெளியிட்ட அறிக்கையில், "கர்நாடகாவில் எச்எம்பிவி தொற்று பாதிப்பு இல்லை. மாநிலத்தில் நிலவும் சுவாசப் பாதை தொற்று தொடர்பான புள்ளிவிவரங்களை ஆராய்ந்ததில், டிசம்பர் 2024ல் பதிவான இத்தகைய நோயாளர்களின் எண்ணிக்கை கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் கவனிக்கத்தக்க அளவுக்கு அதிகரிக்கவில்லை." என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

முன்னதாக, கேரள சுகாதாரத் துறை அமைச்சர் வீனா ஜார்ஜ் நேற்று முன்தினம் அளித்த பேட்டியில், "சீனாவில் எச்எம்பிவி தொற்று பரவியுள்ளதாக வந்த தகவலை தீவிரமாக கண்காணித்து வருகிறோம். இந்த தொற்று கடந்த 2001ம் ஆண்டு கண்டு பிடிக்கப்பட்டது. இது கேரளா உட்பட உலகம் முழுவதும் உள்ள குழந்தைகள் மற்றும் 50 வயதுக்கும் மேற்பட்டவர்களுக்கு பரவியுள்ளதாக நம்பப்படுகிறது. இந்த தொற்று இதற்கு முன்பும் கேரளாவில் ஏற்பட்டுள்ளது. இந்த தொற்றை கண்டறிவதற்கான வசதிகள் கேரள ஆய்வகங்களில் உள்ளது. இந்த தொற்று குறித்து மக்கள் பீதியடையத் தேவையில்லை." என்று கூறினார்.

## "ஆளுநர் உரை காற்றடைத்த பலூன்"

### எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி விமர்சனம்

சென்னை, ஜன.7



"திமுக ஆட்சியில் ஆளுநர் உரை என்பது சபாநாயகர் உரையாக மாறிவிட்டது. இந்த உரை காண்பதற்கு காற்றடைத்த பலூன் போன்று பெரிதாக உள்ளதே தவிர, உள்ளே எதுவும் இல்லை. ஆளுநர் உரை சபாநாயகர் உரையாக காட்சியளிக்கிறது. திமுக அரசுக்கு சுய விளம்பரத்தை தேடித் தருவதைவிட, இந்த உரையில் வேறு எதுவும் இல்லை." என்று சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி விமர்சித்துள்ளார்.

தமிழக சட்டப்பேரவையின் ஆண்டு முதல் கூட்டம் இன்று (ஜன. 6) ஆளுநர் ஆர்.என். ரவி உரையுடன் தொடங்கும் என அறிவிக்கப்பட்டிருந்தது. அதன்படி, தமிழக சட்டப்பேரவையின் இந்தாண்டுக்கான முதல் கூட்டம் இன்று காலை 9.30 மணிக்கு தொடங்கியது. முன்னதாக சட்டப்பேரவைக்கு வந்த தமிழக ஆளுநரை சபாநாயகர் அப்பாவு, சட்டப்பேரவைச் செயலர் ஆகியோர் பூங்கொத்து கொடுத்து வரவேற்றனர். தொடர்ந்து அவருக்கு அணிவகுப்பு மரியாதை அளிக்கப்பட்டது. பின்னர் அவைக்குச் சென்ற ஆளுநர் ஆர்.என்.ரவி சிறிது நேரத்திலேயே வெளியேறி காரில் புறப்பட்டுச் சென்றார். ஆளுநர் வெளியேறிய நிலையில் ஆளுநர் உரையை சபாநாயகர் அப்பாவு முழுமையாக தமிழில் வாசித்தார்.

இதனிடையே, சட்டப்பேரவைக்கு வெளியே செய்தியாளர்கள் சந்திப்பின் போது ஆளுநர் உரை குறித்த கேள்விக்கு பதிலளித்த சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி, "இந்த ஆட்சியில் ஆளுநர் உரை என்பது சபாநாயகர் உரையாக மாறிவிட்டது. இந்த உரை காண்பதற்கு காற்றடைத்த பலூன் போன்று பெரிதாக உள்ளதே தவிர, உள்ளே எதுவும் இல்லை. ஆளுநர் உரை மாற்றப்பட்டு, இன்றைய தினம் அது சபாநாயகர் உரையாக காட்சியளிக்கிறது. இந்த உரை திமுக அரசுக்கு சுய விளம்பரத்தை தேடித் தருவதைவிட, இதில் வேறு எதுவும் இல்லை.

ஆளுநர் உரையை புறக்கணிக்கவில்லை. திட்டமிட்டு ஆளுநர் உரையாற்றக் கூடாது என்ற நோக்கத்துடன் திமுக செயல்பட்டுள்ளது. வழக்கமான மரபுகளைத்தான் தமிழக சட்டப்பேரவை கடைபிடிக்கிறது. இதே ஆளுநர்தான் கடந்த 3 ஆண்டுகளாக வந்து கொண்டிருக்கிறார். முதலில் தமிழ்த்தாய் வாழ்த்து இறுதியில் தேசிய கீதம் என்ற நடைமுறைதானே இருக்கிறது. அதில் மாற்றம் எதுவும் இல்லை.

அதேபோல், திமுக ஆட்சியின் அவலங்களை ஏற்கெனவே இரண்டு மூன்று முறை ஆளுநரைச் சந்தித்து சமர்ப்பித்தோம். அதற்கு ஆளுநர் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. எனவே, அண்ணா பல்கலை. விவகாரத்தில், நாங்கள் சட்டப் பூர்வமாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற அடிப்படையில் முயற்சிகளை எடுத்து வருகிறோம்," என்று அவர் கூறினார்.



இராமநாதபுரம் மாவட்டத்தில் உதவி ஆய்வாளராக பதவி உயர்வு பெற்ற 20 காவல் ஆளிநர்களை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சந்தீஷ் நேரில் அழைத்து வாழ்த்துக்களை தெரிவித்தார்.

## சட்டப்பேரவையில் நடந்தது என்ன?

### சபாநாயகர் அப்பாவு விளக்கம்

சென்னை, ஜன.7



"சட்டப்பேரவைக்கு வந்த காங்கிரஸ் கட்சியினர் கருப்பு பேட்ஜ் அணிந்து வந்திருந்தனர். அதிமுக உறுப்பினர்கள் அனைவரும் கைகளில் பதாகைகளை வைத்திருந்தனர். அண்ணா பல்கலை. விவகாரத்தில் நியாயம் கிடைக்க வேண்டும் என்று கேட்டனர். அண்ணா பல்கலை. வேந்தராக ஆளுநர் இருப்பதால், அவருக்கு எதிராக இந்த போராட்டம் செய்தார்களா? என்று எனக்கு தெரியவில்லை. அதுகுறித்து அவர்கள் யாரும் என்னிடம் சொல்லவும் இல்லை" என்று சபாநாயகர் அப்பாவு கூறியுள்ளார்.

தமிழக சட்டப்பேரவைத் தலைவர் அப்பாவு இன்று (ஜன.6) செய்தியாளர்களைச் சந்தித்தார். அப்போது அவர், "தமிழக சட்டப் பேரவைக் கூட்டத்தொடர் 5 நாட்கள் நடைபெறும். நாளை (ஜன.7) மறைந்த முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ஈவி கேஎஸ் இளங்கோவன், முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங் ஆகியோருக்கு இரங்கல் தீர்மானம் நிறைவேற்றப்படும். ஜன.8ம் தேதி, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம் முன்மொழியப்பட்டு, விவாதம் நடை பெறும். ஜன.9 மற்றும் ஜன. 10ம் தேதிகளில், ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது விவாதம் நடைபெறும். ஜன.11ம் தேதி, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதத்துக்குப் பதிலுரை, அரசின் சட்டமுன்வடிவுகள் ஆய்வு செய்தல் மற்றும் நிறைவேற்றுதல், அரசின் பிற அலுவல்கள் குறித்து விவாதிக்கப்படும்." என்றார்.

தொடர்ந்து சட்டப்பேரவையில் இன்று நடந்த நிகழ்வு குறித்து கேள்விக்கு பதிலளித்த அவர், "சட்டப்பேரவைக்கு வந்த காங்கிரஸ் கட்சியினர் கருப்பு பேட்ஜ் அணிந்து வந்திருந்தனர். அதிமுக உறுப்பினர்கள் அனைவரும் கைகளில் பதாகைகளை வைத்திருந்தனர். அண்ணா பல்கலை. விவகாரத்தில் நியாயம் கிடைக்க வேண்டும் என்று கேட்டனர். அண்ணா பல்கலை. வேந்தராக ஆளுநர் இருப்பதால், அவருக்கு எதிராக இந்த போராட்டம் செய்தார்களா? என்று எனக்கு தெரியவில்லை. அதுகுறித்து அவர்கள் யாரும் என்னிடம் சொல்லவும் இல்லை.

அண்ணா பல்கலைக்கழகத்தின் வேந்தரான தமிழக ஆளுநர் ஆர்.என்.ரவி, சட்டப் பேரவையில் பேச எழுந்த போதுதான், அதிமுக உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து, பதாகைகளைக் காட்டினர்.

நானோ, முதல்வரோ பேசும் போது, அந்த பதாகைகளை அவர்கள் காட்டவில்லை. எனவே, அதற்கு என்ன அர்த்தம் என்று அவர்களைத்தான் கேட்க வேண்டும். எனக்கு தெரியாது. அதனால்தான், உள்ளே என்ன நடந்தது என்று தெரியாமல், எந்த செய்தியையும் என்னை கேட்காமல் வெளியிட வேண்டாம், என்று கூறினேன். ஆளுநர் உரைக்கு குந்தகம் விளைவிக்கும் வண்ணம், கலவர நோக்கத்துடன் அதிமுக செயல்பட்டதால்தான், அவர்களை வெளியேற்றினோம்.

ஆளுநர் வெளிநடப்பு குறித்து அவை முன்னவர் கூறியிருக்கிறார். இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 176 (1)ன்படி, சட்டப் பேரவையில் ஆளுநர் உரையைப் படிக்க வேண்டும். எனவே, ஆளுநர் தனது ஜனநாயக கடமையை நிறைவேற்றியிருக்க வேண்டும். தொடர்ந்து மூன்றாவது ஆண்டாக இது போல் ஆளுநர் செய்து கொண்டிருக்கிறார். அது தவறு என்பதை பேரவையில் தீர்மானம் கொண்டுவந்து கண்டித்திருக்கிறோம்.

கேரளா, தமிழ்நாடு, ஆந்திரா, தெலங்கானா, ஒடிசா உள்பட பல பகுதிகளை உள்ளடக்கியது மெட்ராஸ் பிரசிடென்சி. 1920ல் சட்டமன்ற தேர்தல் நடந்து, முதல் சட்டமன்றக் கூட்டத்தொடர் 1921ல் நடந்தது. அதன் தொடர்ச்சியாக நடந்து வருகிற மரபுபடி, தமிழக சட்டமன்றம் நடைபெறுகிறது. எந்த ஆளுநரும் தேசியகீதம் முதலில் இசைக்க வேண்டும் என்பது போன்ற பிரச்சினையை உருவாக்கவில்லை.

1995ல் முன்னாள் ஆளுநர் சென்னாரெட்டியை உடனடியாக திரும்ப பெற வேண்டும். தன்னிடம் கேட்டுவிட்டுத்தான் புதிய ஆளுநரை நியமிக்க வேண்டும், என்று மறைந்த முன்னாள் முதல்வர் ஜெயலலிதா ஆட்சியில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அதன் பிறகு, 1996ல் ஆளுநர் உரை நிகழ்த்தப்பட்டது. ஆனாலும் சென்னாரெட்டி தன்னுடைய ஜனநாயக கடமையை ஆற்றி விட்டுத்தான் சென்றார்.

ஆளுநர் உரை நடைபெறுகின்ற அந்த நாள், சட்டமன்றக் கூட்டத்தொடர் நடந்த நாட்களின் கணக்கில் வராது. அன்றையதினம் சட்டமன்றம் நடந்ததாக கருதப்படாது. ஆளுநர்களின் கடமை அந்த உரையை வாசித்துவிட்டுச் செல்ல வேண்டும். அந்த உரிமையை மட்டுமே அவர்களுக்கு கொடுக்கப்பட்டுள்ளது. எனவே, கருத்து சொல்வதற்கு எல்லாம் யாருக்கும் உரிமை கிடையாது. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்கள் 234 பேர் மட்டும்தான், பேரவையில் கருத்து சொல்ல முடியும். மற்றவர்களுக்கு கருத்து சொல்லக் கூடிய உரிமை இல்லை.

உரையை வாசிக்க விருப்பமில்லாததால், தேசிய கீதம் இசைக்கப்படவில்லை என்பதை ஆளுநர் ஒரு சாக்குபோக்காக கூறி வருகிறார் என்பதை நான் தெரிந்து கொண்டேன். பேரவைக் கூட்டத்தொடருக்கு அழைக்க சென்றபோது ஆளுநர் சிறப்பான முறையில் உபசரித்தார். அப்போது எந்தவித கருத்து முரண்பாடுகளும் ஏற்படவில்லை. பேரவையிலும் சட்டத்தின்படி, ஆளுநருக்கு தர வேண்டிய அனைத்து மரியாதைகளும் தரப்பட்டன. தொடர்ந்து ஆளுநர் இந்திய அரசியலமைப்புச் சட்டத்துக்கு விரோதமாக, செயல்படுவது நியாயமா என்பதை நீங்கள் தான் கூற வேண்டும்," என்றார்.

## 'தேசிய கீதத்துக்கு அவமதிப்பு'

### சட்டப்பேரவையில் இருந்து வெளியேறிய ஆளுநர் ஆர்.என்.ரவி

சென்னை, ஜன.7



தமிழக சட்டப்பேரவையின் ஆண்டு முதல் கூட்டத்தில் தனது உரையை வாசிக்காமல் ஆளுநர் ஆர்.என்.ரவி புறப்பட்டுச் சென்றார். இது குறித்து ஆளுநர் மாளிகை வெளியிட்ட விளக்கத்தில், "அரசமைப்புக்கும், தேசிய கீதத்துக்கும் அப்பட்டமான அவமரியாதை செய்பவர்களுடன் துணை நிற்கக் கூடாது என்பதால் ஆளுநர் வருத்தத்துடன் அவையில் இருந்து வெளியேறினார்." என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழக சட்டப்பேரவையின் ஆண்டு முதல் கூட்டம் இன்று (ஜனவரி 6) ஆளுநர் ஆர்.என். ரவி உரையுடன் தொடங்கும் என அறிவிக்கப்பட்டிருந்தது. அதன்படி, தமிழக சட்டப்பேரவையின் இந்தாண்டுக்கான முதல் கூட்டம் இன்று காலை 9.30 மணிக்கு தொடங்கியது. முன்னதாக சட்டப்பேரவைக்கு வந்த தமிழக ஆளுநரை சபாநாயகர் அப்பாவு, சட்டப்பேரவைச் செயலர் ஆகியோர் பூங்கொத்து கொடுத்து வரவேற்றனர். பின்னர் அவைக்குச் சென்ற ஆளுநர் ஆர்.என்.ரவி சிறிது நேரத்திலேயே வெளியேறி காரில் புறப்பட்டுச் சென்றார். ஆளுநர் வெளியேறிய நிலையில் ஆளுநர் உரையை சபாநாயகர் அப்பாவு முழுமையாக தமிழில் வாசித்தார்.

ஆளுநர் மாளிகை விளக்கம்: இந்நிலையில் இந்த விவகாரம் தொடர்பாக ஆளுநர் மாளிகை வெளியிட்டுள்ள விளக்கத்தில், "தமிழ்நாடு சட்டப்பேரவையில் இன்று மீண்டும் பாரதத்தின் அரசியலமைப்பு மற்றும் தேசிய கீதம் அவமதிக்கப்பட்டன. தேசிய கீதத்தை மதித்தல் என்பது நமது அரசியலமைப்பில் வகுக்கப்பட்டுள்ள முதலாவது அடிப்படைக் கடமையாகும். அது அனைத்து சட்டப்பேரவைகளிலும் ஆளுநர் உரையின் தொடக்கத்திலும் முடிவிலும் பாடப்படுகிறது.

ஆளுநர் பேரவைக்கு வரும் போது தமிழ்த்தாய் வாழ்த்து மட்டும் பாடப்பட்டது. ஆளுநர் பேரவையிடம் அதன் அரசியலமைப்பு கடமையை மரியாதையுடன் நினைவூட்டியதுடன், தேசிய கீதத்தைப் பாடுவதற்காக முதலமைச்சர், சட்டப் பேரவை சபாநாயகர் அவர்களிடம் உருக்கமாக வேண்டுகோள் விடுத்தார். ஆனால், அவர்கள் திட்டவட்டமாக மறுத்துவிட்டனர்.

இது மிகவும் கவலைக்குரிய விஷயமாகும். அரசியல் சாசனம் மற்றும் தேசிய கீதத்தை அப்பட்டமாக அவமதிக்கும் செயல்களுக்கு உடந்தையாக இருந்துவிடக்கூடாது என்பதால் ஆளுநர் கடும் வேதனையுடன் சட்டப் பேரவையை விட்டு வெளியேறினார்." என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

செல்வப்பெருந்தகை குற்றச்சாட்டு: அவையைப் புறக்கணித்து காங்கிரஸ் எம்எல்ஏ.,க்கள் வெளியேறினர். பின் னர் செய்தியாளர்களை சந் தித்த காங்கிரஸ் எம்எல்ஏ செல்வப் பெருந்தகை, "ஆளுநர் தமிழக மக்களுக்கு விரோதமாக செயல்படுகிறார். மாற்று அரசாங்கத்தை நடத்த முயற்சிக்கிறார். இது ஜனநாயக விரோத போக்கு. கூட்டாட்சிக்கு எதிரானது." என்று கூறினார். காங்கிரஸ் எம்எல்ஏ.,க்கள் கருப்பு பேட்ஜ் அணிந்து வந்ததிருந்தனர்.

'யார் அந்த சார்?' பேட்ஜ்: முன்னதாக அதிமுக எம்எல்ஏ.,க்கள் சட்டப்பேரவைக்கு யார் அந்த சார்? என்ற பேட்ஜ் அணிந்து வந்ததோடு அது தொடர்பாக விவாதிக்கக் கோரி கவன ஈர்ப்பு நோட்டீஸும் கொடுத்திருந்தனர். அவையில் அமளியில் ஈடுபட்ட அதிமுக எம்எல்ஏ.,க்கள் அவையில் இருந்து வெளியேற்றப்பட்டனர்.

## 17ஆம் தேதி விடுமுறை அளித்து முதல்வர் ஸ்டாலின் உத்தரவு

### நீண்ட விடுமுறையை அனுபவிக்கப்போகும் தமிழக மக்கள்

சென்னை, ஜன.7

தமிழகம் இன்னும் ஒரு வாரத்தில் திருவிழா களமாக மாற உள்ளது. தமிழர்களால் கொண்டாடப்படும் முக்கியமான விழாக்களில் ஒன்றான பொங்கல் பண்டிகை விரைவில் வர உள்ளது. தீபாவளி பண்டிகையைவிட பொங்கல் கொண்டாட ஏராளமான மக்கள் தங்கள் சொந்த ஊர்களுக்கு செல்ல திட்டமிடுவார்கள். பொங்கல் பண்டிகைக்கு இன்னும் ஒரு வாரம் மட்டுமே உள்ளதால் புதிய உடைகளை வாங்க ஏராளமானோர் கடைகளில் குவிந்து வருகின்றனர்.

தமிழக அரசின் அதிகாரப்பூர்வ அறிக்கையில் தை பொங்கல் பண்டிகை ஜனவரி 14 அன்று கொண்டாடப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. அதனை தொடர்ந்து ஜனவரி 15 மற்றும் ஜனவரி 16 மாட்டுப்பொங்கல் மற்றும் உழவர் திருநாள் கொண்டாடப்படுவதால் அன்றும் விடுமுறை நாட்களாக அறிவித்துள்ளனர். இந்நிலையில் தமிழக அரசு மக்களுக்கு இன்ப அதிர்ச்சியை கொடுத்துள்ளது.

முன்னதாக, தமிழக அரசு பொங்கல் பண்டிகையை முன்னிட்டு ஜனவரி 14 (செவ்வாய்க்கிழமை) முதல் ஜனவரி 16 (வியாழன்) வரை மூன்று நாட்கள் விடுமுறை அறிவித்தது. இருப்பினும், வெள்ளிக்கிழமை மட்டும் வேலை நாள் இருந்ததால் பலரும் என்ன செய்வதென்று தெரியாமல் குழப்பத்தில் இருந்தனர். அடுத்த 2 நாட்கள் (சனி மற்றும் ஞாயிறு) விடுமுறை என்பதால் இடையில் இருக்கும் வெள்ளிக்கிழமை விடுமுறை அறிவிக்க வேண்டும் என்று ஏராளமான மக்கள் தங்கள் விருப்பத்தை வெளிப்படுத்தி இருந்தனர். இந்நிலையில் இந்த கோரிக்கைகளை ஏற்று, பொங்கல் பண்டிகையை முன்னிட்டு தமிழகம் முழுவதும் உள்ள அனைத்து அரசு அலுவலகங்கள், பொதுத்துறை நிறுவனங்கள், பள்ளிகள், கல்லூரிகள் மற்றும் கல்வி நிறுவனங்களுக்கு 2025 ஜனவரி 17ஆம் தேதி விடுமுறை அளித்து முதல்வர் ஸ்டாலின் உத்தரவிட்டார். மேலும், ஜனவரி 17 அன்று வழங்கப்பட்ட விடுமுறையை ஈடுகட்ட ஜனவரி 25 (சனிக்கிழமை) வேலை நாளாக இருக்கும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. நீண்ட நாள் விடுமுறை வர உள்ளதால் இதனை பயன்படுத்தி, சென்னை போன்ற வெளி ஊரில் வசிக்கும் பலர் பொங்கலை கொண்டாடுவதற்காக தங்கள் சொந்த ஊர்களுக்கு செல்ல திட்டமிட்டு வருகின்றனர்.

தமிழக அரசின் இந்த கூடுதல் விடுமுறை பலருக்கும் மகிழ்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

# தாம்பரத்தில் பார்க்கவே மரியாள் அன்னை வேளாங்கண்ணி மாதா கெபி 10ஆம் ஆண்டு திருவிழா நிகழ்ச்சி



தாம்பரம் ஜன.7

தாம்பரத்தில் பார்க்கவே மரியாள் அன்னை வேளாங்கண்ணி மாதா கெபி 10ஆம் ஆண்டு திருவிழா நிகழ்ச்சி நடைபெற்றது.

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் மாநகராட்சி 64வது வட்டம் ஆனந்தபுரம் பகுதியில் அமைந்துள்ள பார்க்கவே மரியாள் அன்னை வேளாங்கண்ணி மாதா கெபி 10ஆம் ஆண்டு திருவிழா ஜே.ஜோயல் அவர்களின் தலைமையில் நடைபெற்றது இந்த 10ஆண்டு நிறைவு விழாவில் தாம்பரம் மாநகராட்சி மேயர் திருமதி வசந்தகுமாரி கமலக்கண்ணன் அவர்கள் கலந்து கொண்டு அன்னதானம் வழங்கினார்.

இந்த நிகழ்ச்சியில் 64வது வட்டக் கழக செயலாளர் ரமேஷ், மாமன்ற உறுப்பினர் ஷகிலா ஜான்சி மேரி, அதிமுக நகர செயலாளர் எம்.கூத்தன், காங்கிரஸ் பேரியக்கத்தின் மூத்த முன்னோடி ஜி.டி.சேகர், காங்கிரஸ் பேரியக்கத்தின் தாம்பரம் நகர தலைவர் ஜே.பி.விஜய் ஆனந்த், திராவிட முன்னேற்றக் கழகத்தின் மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர் மாரத்தான் விக்கி என்கின்ற ஏ.விக்னேஸ்வரன்,

அதிமுக வட்ட செயலாளர் ஏ.கே.வி.ஜீவன் ஜீவா, விடுதலை சிறுத்தை கட்சியின் பகுதி கழக செயலாளர் ஆதி சாலமன், ஜிடிஎஸ்.பிரபு, திமுக முன்னாள் வட்டக் கழக செயலாளர் எஸ்.சந்திரன், பி.பிரேம், வழக்கறிஞர் சிவா, பி.ரியாஸ் கான், என்.அரவிந்த்ராஜ், எம்.திவாகர், எஸ்.சாய் உள்ளிட்ட ஆலய நிர்வாகிகள் பொதுமக்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

மேலும் இந்த நிகழ்ச்சியில் ஜே.பிரேம் அவர்கள் நன்றி உரையாற்றினார்.

# ஜல்லிக்கட்டு நிகழ்ச்சிகளில் அரசின் வழிகாட்டு நெறிமுறைகளை விழாக்குழுவினர்கள் பின்பற்ற சிவகங்கை ஆட்சியர் அறிவுறுத்தல்

சிவகங்கை ஜன.7

சிவகங்கை மாவட்டத்தில் ஜனவரி2025ஆம் மாதம் முதல் மே 2025ஆம் மாதம் வரையுள்ள காலங்களில் நடைபெறவிருக்கும் ஜல்லிக்கட்டு, வடமாடு, மஞ்சுவிரட்டு நிகழ்ச்சி ஆகியவைகள் குறித்து, தமிழக அரசின் நிலையான வழிகாட்டு நெறிமுறைகளில் தெரிவித்துள்ளவாறு, அதனை விழாக்குழுவினர்கள், ஒருங்கிணைப்பாளர்கள் முறையாக பின்பற்றுதல் வேண்டும்.

ஜல்லிக்கட்டு நடத்த அனுமதி கோரி வரப்பெறும் விண்ணப்பங்களை, அரசிற்கு அனுப்பி, பின்னரே, நிகழ்வு நடத்தப்பட அனுமதிக்க வேண்டுமென்பதால், சம்பந்தப்பட்ட நிகழ்வு நடத்தும் விழாக்குழுவினர் ஒரு மாத காலத்திற்கு முன்னதாகவே மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களுக்கு http://www.jallikattu.tn.gov.in என்ற இணையதளம் வாயிலாக விண்ணப்பக்க வேண்டும்.

அரசிதழில் ஏற்கனவே பதிவு செய்யப்பட்ட கிராமங்களில் மட்டுமே ஜல்லிக்கட்டு நடத்த அனுமதி அளிக்கப்படும்.



ஜல்லிக்கட்டு/வடமாடு நிகழ்ச்சிகளுக்கு உரிய காப்பீடு (ரூ.1 கோடி)க்கு உரிய காப்பீட்டு நிறுவனத்திடம் பெற்று அதனை விண்ணப்பத்துடன் பதிவேற்றம் செய்யப்பட வேண்டும். அரசால் தெரிவிக்கப்பட்டுள்ள வழிகாட்டு நெறிமுறைகளை தவறாமல் பின்பற்றப்பட வேண்டும்.

ஜல்லிக்கட்டு விழா குழுவினர் விழாவிற்கான ஏற்பாடுளை விழா நடைபெறுவதற்கு முன்னர் குறைந்தபட்சம் 24 மணி நேரத்திற்கு முன்பாக அனைத்து பணிகளையும் வழிகாட்டி நெறிமுறைகளில் தெரிவித்துள்ளவாறு பூர்த்தி செய்யும் பட்சத்திலேயே ஜல்லிக்கட்டு நடத்திட மாவட்ட நிர்வாகத்தால் இறுதி உத்தரவு வழங்கப்படும்.

விழா அமைப்பாளர்கள், விழாவில் பங்கேற்க உள்ள காளைகளுக்கு கால்நடை பராமரிப்புத்துறை மருத்துவர்களால் உரிய பரிசோதனை செய்யப்பட்டுள்ளதை உறுதிப்படுத்திட வேண்டும். ஜல்லிக்கட்டு விழாவில் பங்கேற்க உள்ள காளைகள் மற்றும் வீரர்கள் குறித்த விவரங்களை அமைப்பாளர்கள், முன்னரே தெரிவித்து முன் அனுமதி பெறுதல் வேண்டும். பங்கேற்பாளர்கள் குறித்த விவரங்கள் முறையாக பதிவு செய்யப்பட்டுள்ளதை உறுதி செய்தல் வேண்டும்.

விழா அமைப்பாளர்கள் விழாவில் பங்கேற்க உள்ள காளைகளுக்கு எவ்விதமான ஊக்கமருந்துகளோ (Enhancment Drugs) மற்றும் எரிச்சல் அளிக்கக்கூடிய பொருட்களையோ (Irritants) செலுத்தக் கூடாது. காளைகளின் மீது ஜிகினா தூவுதல், கண்களில் எலுமிச்சைச்சாறு பிழிதல், எண்ணெய் தடவுதல் கூடாது.

விழா அமைப்பாளர்கள், ஜல்லிக்கட்டினை திறந்த வெளியில் நடத்திட வேண்டும். காளைகள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள இடம் மருத்துவ பரிசோதனை செய்யும் காளை சேகரிப்பு மையம் ஆகிய இடங்களில் ஷாமியானா பந்தல் அல்லது கூரை அமைத்து காளைகளை வெயிலிருந்தும், மழையிலிருந்தும், பாதுகாக்க வேண்டும். காளைகள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள இடம், காளை சேகரிப்பு மையம் மற்றும் தேவைப்படும் பகுதிகளில் கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தப்பட்டு நிகழ்வுகள் கண்காணிக்கப்படும். மேலும், ஒரே தேதியில் விழா நடத்த விண்ணப்பிக்கப்படும் நேர்வில், முதல் விண்ணப்பம் மட்டும் அந்த தேதியில் நடத்த அனுமதிக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

இதனைக் கருத்தில் கொண்டு, அரசின் வழிகாட்டு நெறிமுறைகளை முழுமையாக பின்பற்றி, ஜல்லிக்கட்டு / வடமாடு / மஞ்சுவிரட்டு நிகழ்ச்சிகளை மாவட்டத்தில் சிறப்பாக நடத்திட அனைவரும் முழு ஒத்துழைப்பு நல்கிட வேண்டும் என மாவட்ட ஆட்சியர் ஆஷா அஜித் தெரிவித்துள்ளார்.

# தமிழக முதல்வருக்கு தேனி பாட்டிப்புரம் ஊராட்சி மன்ற தலைவர் கோரிக்கை

தேனி.ஜன.7

தேனி மாவட்டம் தமிழகத்தில் ஊராட்சிமன்ற தலைவர்கள் 1399 பேரின் பதவிகள் இன்றுடன் நிறைவடைந்த நிலையில், இரண்டு ஆண்டுகள் பதவி நீட்டிப்பு செய்ய சட்டமன்றத்தில் தீர்மானம் கொண்டு வர வேண்டும் என தமிழக முதல்வருக்கு ஊராட்சி மன்ற தலைவர் சார்பில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

தேனி மாவட்டம் சின்னமனூர் ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட பொட்டிப்புரம் கிராம ஊராட்சி மன்றத்தலைவராக இருந்த செல்வராஜ், கடந்த 2019ஆம் ஆண்டு ஊராட்சி மன்ற தலைவராக தேர்ந்தெடுக்



கப்பட்ட நிலையில், கொரோனா காலகட்டங்களில் பொதுமக்களின் பாதுகாப்பு நோய்தடுப்பு நடவடிக்கைகளில் மட்டும் கவனம் செலுத்தப்பட்ட நிலையில், மூன்றாண்டுகள் மட்டுமே மக்கள் நலத்திட்ட பணிகளில் ஈடுபட முடிந்தது. எனவே மேலும் உள்ள மக்கள் பணிகளை முடிக்கும் வகையில் ஊராட்சி மன்ற தலைவர்களின் பதவி காலத்தை இரண்டு ஆண்டுகள் நீட்டிப்பு செய்வதற்கான தீர்மானத்தை நாளை நடைபெற உள்ள சட்டமன்ற கூட்டத்தில் மக்கள் நலன்கருதி தமிழக முதல்வர் நீட்டிப்பு செய்வதற்கான தீர்மானம் கொண்டு வந்தால் ஒட்டுமொத்த கிராம பகுதிகளும் மேம்பாடு அடைவதோடு, வரும் 2026 ஆம் ஆண்டு நடைபெற உள்ள சட்டமன்ற தேர்தலை தமிழக முதல்வர் எதிர் கொண்டு மீண்டும் முதல்வராகும் வகையில் ஊராட்சி மன்ற தலைவர்கள் பணியாற்றுவோம் என கோரிக்கை விடுத்துள்ளார்.

# போடிநாயக்கனூர் டெஸ்லா அகாடமி சார்பில் போட்டித்தேர்வுகளுக்கான புத்தகம் வெளியீடு




போடி, ஜன.7

தேனி மாவட்டம் போடிநாயக்கனூரில் தாலுகா அலுவலகம் அருகில் அமைந்துள்ள 369 டெஸ்லா அகாடமியில் இன்று ஜிஸிஙி கணினி பயிற்றுநர், நெட், செட் ஆகிய போட்டித் தேர்வுகளுக்கான மொத்தம் 15 புத்தகங்களை புத்தக வடிவமைப்பாளர்கள் மற்றும் எழுத்தாளர்கள் 369 டெஸ்லா நிர்வாக இயக்குநர் நாகராஜன், 369 டெல்டா கணினி பேராசிரியர் நந்தினி, 369 டெஸ்லா இயக்குநர் கார்த்திக் ஆகியோர் இணைந்து தயாரித்தனர். இந்த புத்தகங்களை சவுண்டீஸ்வரி பள்ளி செயலாளர் ராமசுப்ரமணியம் மற்றும் வசித்துவம் கல்வி அறக்கட்டளை தலைவர் ஆகியோர் தலைமையிலும், ஏல விவசாய சங்க கல்லூரி முதல்வர் சிவக்குமார் முன்னிலையில் வெளியிட்டனர். சிறப்பு விருந்தினர்களாக ஏல விவசாய சங்க கல்லூரி கணிதத்துறை தலைவர் கிருஷ்ணன், கணிப்பொறி துறை நித்தியானந்த குமாரி, சவுண்டீஸ்வரி பள்ளி தலைமை ஆசிரியர் சதீஷ்குமார், வசித்துவம் கல்வி அறக்கட்டளை பொருளாளர் சந்திர வதனா, 369 டெஸ்லா தலைவர் அபிராமி மற்றும் ஹரிஹரன் மற்றும் 369 டெஸ்லா குழுமத்தினர் பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# தேனியில் புதிய கார் உதிரி பாகங்கள் விற்பனை நிலையத்தை துவக்கி வைத்த தங்க தமிழ்ச்செல்வன் எம்.பி

தேனி. ஜன.7

தேனி மாவட்டம் பழனி செட்டிபட்டி அருகே நிப்பான் பர்னிச்சர் அருகில் புதியதாக துவக்கப்பட்ட கே.எஸ்.ஆர் எக்ஸ்போர்ட் பிரைவேட் லிமிடெட், மோட்டோ கார் ஜோன் நிறுவனத்தின் கார் உதிரி பாகங்கள் விற்பனை நிலையத்தை தேனி நாடாளுமன்ற உறுப்பினர் தங்க. தமிழ்ச்செல்வன் ரிப்பன் வெட்டி திறந்து வைத்து ஏழை எளியோர்களுக்கு வேட்டி சேலை மற்றும் அரிசி வழங்கினார்.

இந்நிகழ்வில் தமிழ்நாடு தொண்டு நிறுவனங்களின் கூட்டமைப்பு மாநில பொதுச் செயலாளர் ராஜன், தமிழ்நாடு வணிகர் சங்க பேரவை தேனி மாவட்ட தலைவர் செல்வகுமார், தமிழ்நாடு மற்றும் பாண்டிச்சேரி வழக்கறிஞர்கள் சங்க கூட்டமைப்பு தென்மண்டல தலைவர் முத்துராமலிங்கம், தேனி இந்து நாடார்கள் உறவின் முறை தலைவர் ராஜமோகன், வீரபாண்டி பேரூராட்சி சேர்மன் கீதா சசி, பழனிசெட்டிபட்டி பேரூராட்சி சேர்மன் மிதுன் சக்கரவர்த்தி, தொழிலதிபர்கள் சரவணகுமார், சீனிவாசன், முத்து செந்தில், ராதா கிருஷ்ணன், கண்ணன், கருணாகரன், சுதாகரன் சுருளிராஜ்,




நேசம் தொண்டு நிறுவன இயக்குனர் நேசம் முருகன், வெளிச்சம் அறக்கட்டளை நிறுவனர் சிதம்பரம், பெரியகுளம் புத்தர் நடுநிலைப்பள்ளி செயலாளர் துறை வேணுகோபால், வசந்தம் ஜூவல்லர்ஸ் முத்துராமன், தமிழ்நாடு காவல் துறை சிறப்பு சப்இன்ஸ்பெக்டர் ராமமூர்த்தி, வீரபாண்டி திமுக பேரூர் கழக செயலாளர் செல்வராஜ், தேனி ராயல் லயன்ஸ் கிளப் செயலாளர் பிரபு, அகில இந்திய ஃபார்வர்டு பிளாக் கட்சி மாவட்ட பொதுச் செயலாளர் சக்கரவர்த்தி, தேனி 21 வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் கிருஷ்ணகுமாரி மற்றும் ருத்ரா டிரேடர்ஸ் நிர்மல் செல்வன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டனர்.

மோட்டோ கார் ஜோன் நிறுவனரும், தேனி மாவட்ட ரெட்டி நல சங்க செயற்குழு உறுப்பினருமான லயன் செந்தில் குமார், கிருஷ்ண ஸ்ரீ மற்றும் ஸ்ரீ ராம் ஆகியோர் வரவேற்றனர்.

# பா.ஜ.க மாவட்ட தலைவர் தரணி முருகேசன் மீது போலீசார் நடவடிக்கை எடுக்க வேண்டும்

## பா.ஜ.க நிர்வாகியின் சமூக வலைதள வீடியோவால் பரபரப்பு

ராமநாதபுரம், ஜன.7

ராமநாதபுரம் மாவட்டத்தில் அண்ணா பல்கலைக்கழக மாணவி பாலியல் வன்கொடுமையை கண்டித்து பா.ஜ.க மகளிர் அணி சார்பில் மதுரையில் இருந்து சென்னையை நோக்கி விழிப்புணர்வு பேரணியாக செல்லவிருந்தனர். அந்தப் பேரணியில் கலந்து கொள்வதற்காக ராமநாதபுரம் மாவட்ட பா.ஜ.க மகளிர் அணியினர் கேணிக்கரை நான்கு ரோடு சந்திப்பில் இருந்து கிளம்ப தயாராக இருந்தனர்.

அப்போது அங்கு வந்த கேணிக்கரை போலீசார் அந்தப் பேரணியில் கலந்து கொள்ள அனுமதி இல்லை எனவும் இங்கிருந்து கிளம்பி சென்றால் உங்களை கைது செய்வோம் எனவும் கூறினர். காவல்துறையினரின் பேச்சை மீறி பேரணியில் கலந்து கொள்வதற்காக தயார் நிலையில் இருந்த வாகனத்தில் ஏற முற்பட்ட பாஜக மகளிர் அணி நிர்வாகிகளை வழியனுப்ப வந்த மாவட்ட தலைவர் தரணி முருகேசன் தலையிலான நிர் வாகிகள் 8 பேரையும் கேணிக்கரை போலீசார் கைது செய்தனர். இதில் பா.ஜ.க மகளிர் அணி நிர்வாகிகளை காவல்துறையினர் வாகனத்தில் ஏற்றும் போது சேலையில் கை பட்டு இழுத்ததால், இதனை தட்டிக் கேட்ட பாஜக அரசு தொடர்பு பிரிவு மாவட்ட செயலாளர் சண்முகநாதன் என்பவர் அங்கிருந்த காவல்துறை அதிகாரிகளிடம் வாக்குவாதத்தில் ஈடுபட்டார். வாக்குவாதம் முற்றிய நிலையில் காவல்துறையினரை பணி செய்ய விடாமல் தடுத்தது பெண் காவல்துறை சார்பு ஆய்வாளரிடம் அத்துமீறி நடந்து கொண்டது என்பது உள்ளிட்ட ஐந்து பிரிவுகளின் கீழ் கேணிக்கரை போலீசார் சண்முகநாதன் மீது வழக்குப்பதிவு செய்து மதுரை மத்திய சிறையில் அடைத்தனர்.

இதனைக் கண்டித்து ராமநாதபுரம் பா.ஜ.க அலுவலகத்தில் மாவட்ட தலைவர் தரணி முருகேசன் நேற்று செய்தியாளர்களை சந்தித்தார்.







அப்போது அவர் காவல்துறை திட்டமிட்டு ஜோடித்து 5 பிரிவுகளின் கீழ் எங்கள் கட்சி நிர்வாகி சண்முகநாதன் மீது வழக்கு பதிவு செய்துள்ளது. இதனை மாவட்ட பா.ஜ.க சார்பில் வன்மையாக கண்டிக்கிறோம்.

மேலும் இந்த விவகாரத்தில் காவல்துறை கஞ்சா விற்பவர்களுக்கும், கடத்தல் காரர்களுக்கும் துணை நின்று இந்த பொய் வழக்கை பதிவு செய்துள்ளது. இதனை கண்டிக்கும் விதமாக தேசிய மனித உரிமை ஆணையத்திலும், நீதிமன்றம் மூலமும் வழக்கு தொடர்ந்துள்ளோம். மேலும் பொய் வழக்கு பதிவு செய்த காவல்துறையினரை கண்டித்து ராமநாதபுரம் மாவட்ட பா.ஜ.க சார்பில் தொடர் கண்டன ஆர்ப்பாட்டத்தையும் நடத்த உள்ளோம். இவ்வாறு அவர் தெரிவித்து இருந்தார்.

இதனை அடுத்து காவல் துறையின் மீது கலங்கத்தை ஏற்படுத்தும் விதமாக பேசிய ராமநாதபுரம் பாஜக மாவட்ட தலைவர் தரணி முருகேசன் போலீசார் நடவடிக்கை எடுக்க வலியுறுத்தி மீது முன்னாள் சார்பு ஆய்வாளராக இருந்து பணி ஓய்வு பெற்று தற்போது பா.ஜ.க அரசு தொடர்பு துறை மாவட்ட தலைவராக இருந்து வரும் முனியசாமி இணையத்தில் வெளியிட்ட வீடியோவால் ராமநாதபுரம் மாவட்டம் முழுவதும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

அந்த வீடியோவில் காவல் துறையினர் பேரணிக்கு அனுமதி மறுத்ததை முன்னரே பா.ஜ.க மாவட்ட தலைவர் தரணி முருகேசனுக்கு சம்மன் மூலமாக தெரிவித்தும், காவல் துறையினரை அவமதித்து பேரணியில் கலந்து கொள்ள செல்வதற்காக முற்பட்ட கட்சி நிர்வாகிகளை காவல்துறையினர் கைது செய்தனர். இதில் காவல்துறையினரை குற்றம் சொல்வது ஏற்றுக்கொள்ள முடியாது. ஏனென்றால் காவல் துறை அனுப்பிய சம்மனில் பா.ஜ.க மாவட்ட தலைவர் தரணி முருகேசன் கையெழுத்திட்டுள்ளார். அதனை மீறி பேரணியில் கலந்து கொள்ள முற்பட்டதால் காவல்துறையினர் கைது செய்துள்ளனர். பா.ஜ.க அரசு தொடர்பு துறை மாவட்ட செயலாளர் என தன்னை கூறிவரும் சண்முகநாதன் என்பவரை அந்த துறையின் மாவட்ட தலைவர் என்ற அடிப்படையில் அவரது ஒழுங்கீன நடவடிக்கைகளை கருத்தில் கொண்டு பொறுப்பிலிருந்து நான் நீக்கிவிட்டேன். சண்முகநாதன் என்பவர் கூட்டத்தில் நடந்து கொண்ட ஒழுங்கீனத்தால் காவல்துறையினர் அவர் மீது வழக்குப்பதிவு செய்து சிறையில் அடைத்துள்ளனர். இதில் காவல்துறை கஞ்சா விற்பவர்களுக்கும் கடத்தல் காரர்களுக்கும் துணை போகிறது என தரணி முருகேசன் கூறியிருக்கிறார். அதை அவர் ஆதாரப்பூர்வமாக நிரூபிக்க வேண்டும். கட்சி பொறுப்பிலிருந்து நீக்கப்பட்ட சண்முக நாதனை அனுமதி இல்லாத பேரணிக்கு அழைத்து வந்தது முதல் தவறு. அங்கு பணியில் இருந்த பெண் காவல் சார்பு ஆய்வாளரிடம் சண்முகநாதன் நடந்துள்ளது கொண்ட விதம் இரண்டாவது தவறு. இப்படி தவறு எல்லாவற்றையும் தங்கள் மீது வைத்துக் கொண்டு செய்தியாளர்களை அழைத்து காவல்துறையின் மீது களங்கம் சுமத்தும் தரணி முருகேசன் மீது மாவட்ட காவல்துறை வழக்கு பதிவு செய்து நடவடிக்கை எடுக்க வேண்டும். அவ்வாறு மாவட்ட காவல்துறை நடவடிக்கை எடுக்க விட்டாலும் நான் எனது சொந்த பொறுப்பில் தேசிய மனித உரிமை ஆணையத்திலும் நீதிமன்றத்திலும் தரணி முருகேசன் மீது காவல்துறையினரை அவமதித்து பேசியதாக வழக்கு தொடர்வேன். இதனால் என்னை பா.ஜ.க கட்சியில் இருந்து நீக்கினாலும் அதனை ஏற்றுக்கொள்ள தயாராக உள்ளேன் என்றார்.

# பம்மல் எம்ஜிஆர் நகரில் 47 லட்சம் மதிப்பீட்டில் பசுமை வெளி அறிவியல் பூங்கா அமைக்க அடிக்கல் நாட்டிய எம்எல்ஏ, மேயர்


பம்மல் ஜன.7

தாம்பரம் மாநகராட்சி பம்மல் 1வது மண்டலம் வார்டு 6 எம்.ஜி.ஆர். நகரில் சென்னை பெருநகர் வளர்ச்சி குழும திறந்த வெளி கட்டண நிதியின் (2324) கீழ் ரூ.47 லட்சம் திட்ட மதிப்பீட்டில் பசுமை வெளி அறிவியில் பூங்கா அமைக்க பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் காஞ்சி வடக்கு மாவட்ட துணை செயலாளர் இ.கருணாநிதி, தாம்பரம் மாநகராட்சி மேயர் தாம்பரம் மாநகர துணை செயலாளர் வசந்தகுமாரி கமலக்கண்ணன் அகியோர் அடிக்கல் நாட்டினார்கள்.




இந்நிகழ்ச்சியில் தாம்பரம் மாநகராட்சி துணை மேயர் தாம்பரம் மாநகர அவைத் தலைவர் கோ.காமராஜ், தாம்பரம் மாநகராட்சி 1வது மண்டலம் குழுத் தலைவர் பம்மல் தெற்கு பகுதி செயலாளர் வே.கருணாநிதி, பம்மல் வடக்கு பகுதி செயலாளர் த.ஜெயகுமார், உதவி செயற் பொறியாளர் சத்தியசீலன், மாமன்ற உறுப்பினர்கள் கல்யாணி டில்லி, ரம்யா சத்யாபிரபு, சத்யா மதியழகன், பொதுப்பணி மேற்பார்வையாளர்கள் அருணாசலம், நரேந்திர ராஜூ, பணியின் ஒப்பந்ததாரர், 6வது வட்ட செயலாளர் வி.எஸ்.ஜெகநாதன், மாவட்ட பிரதிநிதி பா.டில்லி, மாநகர பிரதிநிதி பி.ஜே. வேந்தன், மாநகர இளைஞர் அணி அமைப்பாளர் பி.கே.ஏ. சத்தியபிரபு, மாநகர தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் சி.மதியழகன், மாநகர சிறுபான்மை நலப்பிரிவு துணை அமைப்பாளர் ந.இன்பராஜ், வட்ட கழக நிர்வாகிகள், மாநகராட்சி பணியாளர்கள் மற்றும் பொதுமக்கள் உடன் இருந்தனர்.

# மதுரை கள்ளிக்குடி தெற்கு ஒன்றிய திமுக சார்பாக உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாள் நலத்திட்ட உதவிகள்



மதுரை ஜன.7

தமிழகதுணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாளை முன்னிட்டு மதுரை கள்ளிக்குடி தெற்கு ஒன்றிய திமுக சார்பாக நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா நடைபெற்றது.

கள்ளிக்குடி V.T. மணி நகர் பகுதியில் கள்ளிக்குடி தெற்கு ஒன்றிய கழகச் செயலாளர் மதன்குமார் தலைமையிலும், தேனி தெற்கு மாவட்ட இலக்கிய அணி அமைப்பாளரும், திருமங்கலம் சட்டமன்ற தொகுதி பார்வையாளருமான டிஸ்கோ அலாவுதீன் முன்னிலையிலும் இந்த நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட மதுரை தெற்கு மாவட்ட கழகச் செயலாளர் சேடபட்டி மணிமாறன் சிறப்புரையாற்றி நலத்திட்ட உதவிகளை ஆயிரத்துக்கும் மேற்பட்ட பொதுமக்களுக்கு வழங்கினார்,

இந்நிகழ்வின் அவைத்தலைவர் சுந்தரமூர்த்தி, ஒன்றிய துணைச் செயலாளர்கள் அழகர்சாமி, பால்பாண்டி, ராசுலோசனா, ஒன்றிய பொருளாளர் தேசிங்கு ராஜன், மாவட்ட பிரதிநிதிகள் ஹரிஹரன், பாண்டி, ராதாகிருஷ்ணன் மற்றும் அணி அமைப்பாளர்கள், உள்ளாட்சி பரிதிநிதிகள், கழகத்தின் மூத்த முன்னோடிகள், பொறுப்பாளர்கள், தொண்டர்கள் என பலர் கலந்து கொண்டனர்,




இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் இராமநாதபுரம் மாவட்ட வாக்காளர் பட்டியல் பார்வையாளர் ஹனிஷ் சாப்ரா, தலைமையில், வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்ப்பு மற்றும் திருத்தம் தொடர்பாக பெறப்பட்ட மனுக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் குறித்தும், வாக்காளர் பட்டியல் வெளியிடுவது தொடர்பான ஆலோசனைக்கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தில் மாவட்ட தேர்தல் அலுவலர/மாவட்ட ஆட்சியர் சிம்ரன்ஜீத் சிங் காலோன், உடன் இருந்தார்



ராமநாதபுரம் மாவட்டம் இராமநாதபுரத்தில் தைரியம் மற்றும் நம்பிக்கை கொண்டு நேர்மறை சிந்தனையை வெளிக்காட்டுவதற்கு முன்மாதிரியாக ஆன்லைன் உணவு டெலிவரி செய்யும் குணசேகரன் என்பவரை காவல் கண்காணிப்பாளர் நி.சந்தீஷ், IPS. பாராட்டினார்.



வேலூர் மாவட்டம், காட்பாடி தாலுகா, பிரம்மபுரம் நெடுஞ்சாலையில், பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்தநாள் விழாவினை சிறப்பிக்கும் வகையில், மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் சார்பில் அறிஞர் அண்ணா மாரத்தான் ஓட்டம் பந்தயத்தை மாவட்ட ஆட்சியர் சுப்புலெட்சுமி, பிரம்மபுரம் தனியார் பள்ளி அருகில் கொடியசைத்து தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் மாநகராட்சி 1வது மண்டல குழு தலைவர் புஷ்பலதா வன்னியராஜா, வருவாய் கோட்டாட்சியர் இரா.பாலசுப்பிரமணியன், மாவட்டவிளையாட்டு அலுவலர் பாலமுருகன், வட்டாட்சியர் ஜெகதீஸ்வரன், துறை சார்ந்த அலுவலர்கள் மற்றும் பந்தய வீரர் வீராங்கனைகள் என பலர் கலந்து கொண்டனர்.




திண்டுக்கல் மாவட்டம் கொடைக்கானலுக்கு சுற்றுலா வந்த மதுரையை சேர்ந்த சுற்றுலா பயணி ஒருவர் தனியார் உணவகத்தில் உணவருந்து சென்றபோது அங்கு கொடுக்கப்பட்ட உணவு சரி இல்லை என்று சுற்றுலா பயணி முறையிட்டுள்ளார் அப்போது உணவக உரிமையாளர்கள் தாக்கியதாகவும் மேலும் சுற்றுலா பயணிகளின் காரையும் உடைத்து உள்ளனர் இது குறித்து நான்கு பேரையும் கைது செய்தனர்.

# பொங்கல் தொகுப்புடன் ஆயிரம் ரூபாய் வழங்கிட வலியுறுத்தி தேமுதிகவினர் சிவகங்கையில் ஆர்ப்பாட்டம்



சிவகங்கை ஜன.7

பொங்கல் தொகுப்புடன் ஆயிரம் ரூபாய் வழங்கிட வலியுறுத்தி தேமுதிகவினர் சிவகங்கையில் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

சிவகங்கை மாவட்டம் தேமுதிகவினர் பொங்கல் தொகுப்புடன் ஆயிரம்ரூபாய் வழங்கிட வேண்டும், அண்ணா பல்கலைக்கழகத்தில் மாணவிகளுக்கு எதிரான பாலியல்

வன்கொடுமையை தமிழகத்தில் மாணவிகள் மற்றும் பெண்களுக்கு உரிய பாதுகாப்பை உறுதிசெய்திடவேண்டும், புயல் மழையால் பாதிக்கப்பட்ட மக்கள் மற்றும் விவசாயிகளுக்கு உரிய நிவாரணம் வழங்கிட வேண்டும்.கஞ்சா மற்றும் மதுபோதை இல்லாத மாநிலமாக தமிழகத்தை உருவாக்க வேண்டும் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி தமிழகத்தில் பெண்கள் மற்றும் பள்ளி முதல் கல்லூரி வரை மாணவிகளுக்கு பாதுகாப்பு இல்லை என தமிழக அரசை கண்டித்து தேசிய முற்போக்கு திராவிட கழகத்தை சேர்ந்த 100க்கும் மேற்பட்டோர் சிவகங்கை கோர்ட் வாசல் அருகே மாவட்டச் செயலாளர் திருவேங்கடம் தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்நிகழ்வில் மாவட்டத் துணைச் செயலாளர் ஞான முத்து மாவட்ட பொருளாளர் அருணா கண்ணன், நகர செயலாளர் தர்மராஜ், அவைத் தலைவர் மாரி, மாவட்ட வழக்கறிஞர் பிரிவு செயலாளர் சௌந்தர்ராஜன், ஒன்றிய செயலாளர்கள் விஜய மூர்த்தி, தமிழ் முருகன், காந்திதர்மராமு, சிவா, ஜாபர் அலி, ராமதாஸ் சொல்லிட்டு ஏராளமான தேமுதிக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# இறுதி வாக்காளர் பட்டியலினை அங்கீகரிக்கப்பட்ட அனைத்து அரசியல் கட்சிப்பிரமுகர்கள் முன்னிலையில் வெளியிட்ட சிவகங்கைஆட்சியர்



சிவகங்கை ஜன07

சிவகங்கை மாவட்டத்தில் இறுதி வாக்காளர் பட்டியல் 2025 ஐ, சிவகங்கை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் அங்கீகரிக்கப்பட்ட அனைத்து அரசியல் கட்சி பிரமுகர்கள் முன்னிலையில், மாவட்ட ஆட்சியர் ஆஷா அஜித், வெளியிட்டு தெரிவிக்கையில்,

இந்திய தேர்தல் ஆணையம் அறிவுரைப்படி, ஒவ்வொரு ஆண்டும் வாக்காளர் பெயர் சேர்த்தல், நீக்கல், திருத்தம் மற்றும் வாக்குச்சாவடி மையம் விரிவுபடுத்துதல் தொடர்பாக பணிகள் மேற்கொள்ளப்பட்டு அங்கீகரிக்கப்பட்ட அனைத்துக் கட்சி பிரமுகர்களின் ஆலோசனை மற்றும் பொதுமக்களின் ஆலோசனை பெற்று, அதனடிப்படையில் இந்திய தேர்தல் ஆணையம் வழிகாட்டுதலின்படி திட்டப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதன்படி, சிவகங்கை மாவட்டத்தில் 01.01.2025 ம் தேதியினை தகுதி ஏற்படுத்தல் நாளாகக் கொண்டு வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்கத் திருத்தம், 2025 தொடர்பான பணிகள் கடந்த 29.10.2024 முதல் 28.11.2024 முதல் நடைபெற்றது.

சிவகங்கை மாவட்டத்தில் 1364 வாக்குச்சாவடிகள் மறுசீரமைப்புக்கு பின் மாற்றி அமைக்கப்பட்டு கடந்த 29.10.2024 அன்று வெளியிடப்பட்ட சிறப்பு சுருக்கத் திருத்தம், ஒருங்கிணைந்த வரைவு வாக்காளர் பட்டியலின்படி, சிவகங்கை மாவட்டத்திலுள்ள நான்கு சட்டமன்ற தொகுதிகளிலும் மொத்தம் 5, 88, 036 ஆண் வாக்காளர்களும், 6, 10, 159 பெண் வாக்காளர்களும், 60 மூன்றாம் பாலினம் வாக்காளர்களும் என ஆக மொத்தம் 11,98,255 வாக்காளர்கள் இருந்தனர்.

மேலும், 29.10.2024 முதல் 28.11.2024 வரை மொத்தம் 37, 072 மனுக்கள் பெறப்பட்டு, இதில் 36, 361 மனுக்கள் அனுமதிக்கப்பட்டு711 மனுக்கள் தள்ளுபடிசெய்யப்பட்டது. 29.10.2024 முதல் 28.11.2024 வரை தொடர் திருத்தத்தில் 9, 792 ஆண் வாக்காளர்களும், 12, 803 பெண் வாக்காளர்களும், 04 மூன்றாம் பாலினம் வாக்காளர்களும் ஆக மொத்தம் 22, 599 வாக்காளர்கள் புதிதாக வாக்காளர் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இத்திருத்தத்தின் போது 2, 567 ஆண் வாக்காளர்களும் 3, 289 பெண் வாக்காளர்களும் மற்றும் 01 மூன்றாம் பாலினம் வாக்காளர்களும் என ஆக மொத்தம் 5, 857 வாக்காளர்கள் பட்டியலிருந்து நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

அதன்படி, 184காரைக்குடி சட்டமன்றத் தொகுதியில் 1, 57, 432 ஆண் வாக்காளர்களும், 1, 63, 582 பெண் வாக்காளர்களும், 54 மூன்றாம் பாலின வாக்காளர்களும் என 3, 21, 068 வாக்காளர்களும், 185திருப்பத்தூர் சட்டமன்றத் தொகுதியில் 1, 48, 104 ஆண் வாக்காளர்களும், 1, 54, 958 பெண் வாக்காளர்களும், 03 மூன்றாம் பாலின வாக்காளர்களும் என 3, 03, 065 வாக்காளர்களும், 186சிவகங்கை சட்டமன்றத் தொகுதியில் 1, 49, 418 ஆண் வாக்காளர்களும், 1, 55, 423 பெண் வாக்காளர்களும், 02 மூன்றாம் பாலின வாக்காளர்களும் என 3, 04, 843 வாக்காளர்களும், 187மானாமதுரை (தனி) சட்டமன்றத் தொகுதியில் 1, 40, 307ஆண் வாக்காளர்களும், 1, 45, 710 பெண் வாக்காளர்களும், 4 மூன்றாம் பாலின வாக்காளர்களும் என 2, 86, 021 வாக்காளர்களும் என மொத்தம் நான்கு சட்டமன்றத் தொகுதிகளிலும் சேர்த்து 5, 95, 261 ஆண் வாக்காளர்களும், 6, 19, 673 பெண் வாக்காளர்களும், 63 மூன்றாம் பாலின வாக்காளர்களும் என ஆக மொத்தம் 12, 14, 997 வாக்காளர்கள் உள்ளனர்.

அவ்வாக்காளர்கள் இடம்பெற்றுள்ள இறுதி வாக்காளர் பட்டியல் நேற்றைய தினம் அங்கீகரிக்கப்பட்ட அனைத்து அரசியல் கட்சி பிரமுகர்கள் முன்னிலையில் வெளியிடப்பட்டுள்ளது என மாவட்ட ஆட்சியர் ஆஷா அஜித் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், தேவகோட்டை சார் ஆட்சியர். ஆயுஷ் வெங்கட் வட்ஸ், மாவட்ட வருவாய் அலுவலர் மரு.எஸ்.செல்வசுரபி, சிவகங்கை வருவாய் கோட்டாட்சியர். விஜயகுமார் தனி வட்டாட்சியர் (தேர்தல்) (பொ) ரமேஷ், அனைத்து வட்டாட்சியர்கள், அனைத்து நகராட்சி ஆணையா ளர்கள், துணை வட்டாட்சியர் (தேர்தல்), அனைத்துத்துறை சார்ந்த அலுவலர்கள் மற்றும் அனைத்து அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிப்பிரமுகர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# மதுரையில் மாற்றுத்திறனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கிய மத்திய சமூக நீதித்துறை அமைச்சர்



மதுரை ஜன.7

மத்திய சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சர் டாக்டர் விரேந்திர குமார் மாற்றுத்திறனாளிகளின் திறன் வளர்ச்சி, மறுவாழ்வு மற்றும் மேம்பாட்டிற்கான ஒருங்கிணைந்த பிராந்திய மையத்தின் புதிய கட்டிடத்திற்கு அடிக்கல் நாட்டினார்.

இந்திய அரசின் மாற்றுத்திறனாளிகளின் மேம்பாட்டு துறை, மத்திய சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகத்தின் கீழ் வில்லாபுரத்தில் இயங்குகிற மாற்றுத்திறனாளி களின் திறன் வளர்ச்சி, மறுவாழ்வு மற்றும் மேம்பாட்டிற்கான ஒருங்கிணைந்த பிராந்திய மையமானது டிசம்பர் 2023 முதல் மாற்றுத்திறனாளிகளுக்கு பல்வேறு வகையான மறுவாழ்வு சேவைகளை செய்துவருகிறது. இந்த நிறுவனத்தின் சேவைகளை மத்திய சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சர் முனைவர் விரேந்திர குமார் வில்லாபுரத்தில் துவக்கிவைத்தார்.

மேலும் மதுரையில் யா.புதுப்பட்டியில் அமையவிருக்கும், தமிழக அரசு வழங்கியுள்ள 5.05 ஏக்கர் நிலத்தில், ரூபாய் 36.41 கோடி மதிப்புள்ள புதிய கட்டிடம் கட்டுவதற்கு அடிக்கல் நாட்டினார். இந்த புதிய கட்டிடதில் நவீன வசதிகளுடன் கூடிய சேவைப்பிரிவு, மனிதவள மேம்பாட்டு திட்டங்களுக்கான வகுப்பறைகள், மாற்றுத்திறனாளிகள் தங்கு தடைஇன்றி எளிதில் அணுகும் வகையிலான உள்கட்டமைப்பு வசதிகள், அனைத்து வகையான மாற்றுத்திறன் குழந்தைகளுக்கான ஆரம்பநிலை பயிற்சி மையம் ஆகியவை இதன் சிறப்பம்சமாகும்.

இந்த புதிய நிறுவன வசதிகள் தமிழ்நாட்டின் தென் பகுதியில் உள்ள மாற்றுத்திறனாளிகளுக்கு நல்வாய்ப்பாக அமையும். இந்தவிழாவில் ரூபாய் 22, 63, 000/ மதிப்புள்ள 120 மாற்றுத்திறனாளிகளுக்கு தேவையான 186 வகையான உதவி உபகரணங்களையும் வழங்கினார். இவ் விழாவில் உள்ளாட்சி நிர்வாகத்தின் பிரதிநிதிகள், இந்திய அரசின் மாற்றுத்திறனாளிகள் மேம்பாட்டுத்துறை இணை செயலாளர் ராஜீவ் ஷர்மா, NIEPMD இயக்குநர் டாக்டர். நச்சிகேதா ரௌட், சி.ஆர்.சி இயக்குனர் ஜெயசீலி ப்ளோரா, மதுரை மாநகராட்சி துணை மேயர் நாகராஜன், மத்திய மற்றும் மாநில அரசு அதிகாரிகள், மறுவாழ்வுத் துறையின் நிபுணர்கள், அரசு சாரா நிறுவனங்கள், மாற்றுத்திறனாளிகள், பெற்றோர்கள், பொதுமக்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.



திருப்பூர் மாவட்டம் திருப்பூர் மாநகராட்சி மண்டலம் 2 புதிய பேருந்துநிலையம் அருகில் செயல்பட்டுவரும் ஆதரவற்றோர் இரவு நேர தங்கும் விடுதியை மாநகராட்சி ஆணையாளர் ராமமூர்த்தி பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். இந்நிகழ்வில் தலைமை பொறியாளர் செல்வநாயகம் உதவி பொறியாளர் முனியாண்டி மாநகராட்சி அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்..



உலகப்புகழ் அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டு முன்னேற்பாடு பணிகள் விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது. முதற்கட்டமாக இரண்டடுக்கு பாதுகாப்பு வேலி அமைப்பது, ஜல்லிக்கட்டு காளைகள் வந்து சேருமிடம் (கலெக்ஷன் பாயிண்ட்), தற்காலிக பார்வையாளர் அமரும் கேலரி அமைப்பதற்கான பணிகள் விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது.



சீர்மிகு நகர திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டு வரும் நொய்யல் ஆறு மேம்பாடு செய்தல் பணிகளை திருப்பூர் மாநகராட்சி ஆணையாளர் ராமமூர்த்தி ஸ்ரீ சக்தி தியேட்டர் அருகில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். தலைமை பொறியாளர் (பொறுப்பு) செல்வநாயகம் உதவி செயற்பொறியாளர் முனியாண்டி மாநகராட்சி அலுவலர்கள் பலர் உடன் இருந்தனர்.

# பெரியகுளத்தில் மாபெரும் வளரி பயிற்சி முகாம் ; தெ.கள்ளிப்பட்டி அதி சிலம்ப அணி சாம்பியன்



பெரியகுளம், ஜன.7

தேனி மாவட்டம் பெரியகுளம் நியூ கிரவுண்டில் மாவீரன் நேதாஜி சிலம்பம் இளைஞர் நற்பணி மன்றம் மற்றும் மருது வளரி இணைந்து மாபெரும் வளரி பயிற்சி முகாம் நடைபெற்றது. இந்த போட்டியில் தென்கரை கள்ளிப்பட்டியை சார்ந்த அதி சிலம்ப குழுவினர் பங்கேற்று சிறந்த முறையில் வளரி எறிதலில் தேர்ச்சி பெற்று பதக்கம் மற்றும் பாராட்டு சான்றிதழ் பெற்றனர். சிறந்த ஆசான் விருது அதி சிலம்ப நிறுவனர் ஆசான் அஜித் துக்கு வழங்கியதோடு பாரம்பரிய முறைப்படியும் கௌரவித்தனர். வளரி பயிற்சியில் சிறப்பாக பங்காற்றிய தெ. கள்ளிப்பட்டியை சேர்ந்த யுவஸ்ரீ, பாலமுகேஷ், தமிழரசன், சுவிதா, மதனேஸ்வரன் ஆகிய வீரர், வீராங்கனைகளை ஊர் பொது மக்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் பாராட்டினர். இந்நிகழ்வில் சிலம்பம் மற்றும் வளரி பயிற்சியின் மாநில நடுவர் சிலம்ப ஆசான் தங்கப்பாண்டி, மருது வளரி விளையாட்டு சங்க நிறுவனர் வளரி வீரன் கார்த்திக் உள்பட பலர் கலந்து கொண்டனர்.




மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் சிறப்பு சுருக்கமுறைத்திருத்தம் 2025க்கான இறுதி வாக்காளர் பட்டியலை அனைத்து அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரதிநிதிகள் முன்னிலையில் மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட ஆட்சித்தலைவர் மா.சௌ.சங்கீதா வெளியிட்டார்.



மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் தாட்கோ திட்டத்தின் கீழ் தாட்கோ ரூ3,10,572 மானியத்துடன் கூடிய வங்கிக்கடன் ரூ.887349 திட்ட மதிப்பிலான டூரிஸ்டர் வாகனத்தின் சாவியை பயனாளிக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் மா.சௌ. சங்கீதா வழங்கினார். உதவி ஆட்சியர்(பயிற்சி) .வைஷ்ணவிபால் இ.ஆ.ப.,தாட்கோ மாவட்ட மேலாளர் பாலசுப்பிரமணியன் ஆகியோர் உடன் உள்ளனர்.

திண்டுக்கல் மாவட்டம் கொடைக்கானல் நகர பாரதிய ஜனதா கட்சியின் நகரத் தலைவராக என்னை நியமனம் செய்த மாநில தலைவர் அண்ணாமலைக்கும் மாவட்டத் தலைவர் பழனி கனகராஜ் அவர்களுக்கும் மற்றும் மாவட்டதுணை தலைவர் டாக்டர் மதன்குமார் அவர்களுக்கும் பொதுச்செயலாளர் செந்தில்குமார் பொருளாளர் ஆனந்த் மற்றும் எனக்கு உறுதுணையாக இருந்த கொடைக்கானல் நகர பாரதிய ஜனதா கட்சியின் அனைத்து சொந்தங்களுக்கும் என் மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன் என்றார்.



மதுரை மாநகர புதிய காவல் துணை ஆணையராக (வடக்கு) ஜி.எஸ். அனிதா பொறுப்பேற்றுக்கொண்டார்.

# மதுரை மாநகர போக்குவரத்து காவல்துறை சார்பில் சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு இருசக்கர வாகன பேரணி

மதுரை ஜன.7

மதுரை மாநகர காவல் ஆணையர் லோகநாதன் உத்தரவு படி போக்குவரத்து பிரிவு சார்பாக சாலை விபத்துகளை குறைப்பதற்காக பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. அதில் ஒன்றான (BLACK SPOTSANDHOTSPOTS) விபத்து பகுதிகளை கண்டறிதல், ஆய்வு செய்தல் மற்றும் அதனை சீரமைத்தல் என பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.



மதுரை மாநகர் காவல் ஆணையர் பொதுமக்களிடையே சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வண்ணம் “சாலை பாதுகாப்பு மாதம் 2025 காவல்துறையினரின் சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு இருசக்கர வாகன பேரணியை தமுக்கம் சந்திப்பில் கொடியசைத்து துவக்கி வைத்தார்கள். இந்த இருசக்கர வாகன பேரணியில் சட்டம் - ஒழுங்கு. போக்குவரத்து, ஆயுதப்படை, ஊர் காவல்படை காவலர்கள் சுமார் 200 பேர் கலந்துகொண்டனர்.

மேற்படி இருசக்கர வாகன பேரணியானது தமுக்கம் மைதானம் தமிழன்னை சிலையில் இருந்து துவங்கி, கோரிப்பாளையம் AV BRIDGE மாசிவீதிகள் வழியாக மேலமாசி வடக்குமாசி வீதி சந்திப்பில் நிறைவடைந்தது. முன்னதாக இருசக்கர வாகனங்களில் தலைக்கவசம் அணிந்து சென்ற பொதுமக்களுக்கு தமுக்கம் சந்திப்பில் இனிப்பு மற்றும் விழிப்புணர்வு வாசகங்கள் அடங்கிய துண்டு பிரசுரங்களை காவல் ஆணையர் வழங்கினார். இந்நிகழ்வில் துணை ஆணையர் போக்குவரத்து, காவல் கூடுதல் துணை ஆணையர் போக்குவரத்துதிட்டமிடல் மற்றும் உதவி ஆணையர்கள் நகர். தல்லாகுளம் மற்றும் போக்குவரத்து காவல் ஆய்வாளர்கள் கலந்து கொண்டனர்.

காவல் ஆணையர் மதுரை மாநகரில் இதுவரையில் 76 இடங்கள் அடிக்கடி விபத்துக்கள் நடைபெறும் பகுதிகளாக கண்டறியப்பட்டு அப்பகுதிகளில் ZIG-ZAG பேரிக்காடுகள் அமைத்தல், சாலைகளில் வர்ணம் பூசுதல், ஒரு வழி பாதை அமைத்தல், ஒளிரும் விளக்குகளை வைத்தல், வேகக்கட்டுப்பாடு மற்றும் சாலை குறியீடுகளை அமைத்தல், அங்குள்ள சாலை அமைப்புகளை மாற்றி அமைத்தல் போன்ற பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இதன் காரணமாக மதுரை மாநகரில முந்தைய ஆண்டினை காட்டிலும் கடந்த 2024ஆம் ஆண்டில் 26 இறப்பு வழக்குகளும் 88 காய வழக்குகளும் மொத்தம் 114 விபத்துகள் என குறைந்துள்ளன. இது சென்ற ஆண்டை ஒப்பிடுகையில் 15% குறைவாகும். மேலும் கடந்த 2024ம் ஆண்டில் போக்குவரத்து விதிமீறலில் ஈடுபட்டவர்களின் மீது 4,85,023 வாகன வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளது. விபத்துக்களின் மீதான ஆய்வில் மதுரை மாநகரில் பாதசாரிகள் 40%ம் இரு சக்கர வாகனங்களில் 56.5%ம் என அதிகமாக விபத்துக்குள்ளாகி உள்ளனர்.

பாதசாரிகள் விபத்துக்குள்ளாவதை தடுக்க, சாலையின் மைய்யப்பகுதியில் காணப்பட்ட 236 இடைவெளிகளை கண்டறிந்து அவை அனைத்து அடைக்கப்பட்டதில் விபத்துக்கள் வெகுவாக குறைந்துள்ளன. இவற்றை கருத்தில் கொண்டு இந்த ஆண்டும் தொடர்ந்து நடவடிக்கை மேற்கொண்டு பாதசாரிகள் மற்றும் இருசக்கர வாகன ஓட்டிகள் வீபத்துக்குள்ளாவதை தடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என தெரிவித்தார்கள்.

# மதுரை அரசு இராசாசி மருத்துவமனை கட்டண படுக்கை சிகிச்சை பிரிவு ஒரு கோடி ரூபாய் வசூலித்து சாதனை!



மதுரை ஜன7

மதுரை அரசு இராசாசி மருத்துவமனையில் கட்டண படுக்கை சிகிச்சைப் பிரிவுகள் விபத்து மற்றும் சிகிச்சைப்பிரிவில் 8 படுக்கைகளும் (4 Deluxe Room + 4 single room), பன்நோக்கு உயர் சிகிச்சைப் பிரிவில் 8 (3 Deluxe Room + 5 single room) படுக்கைகளுடன் கடந்த 2023 மார்ச் மாதம் 2ம் தேதி தமிழ்நாடு சுகாதாரம் மற்றும் நல்வாழ்வுத்துறை அமைச்சரால் துவக்கி வைக்கப்பட்டது.

கட்டண படுக்கை சிகிச்சைப் பிரிவில் தற்போது வரை 919 நோயாளிகள் மற்றும் உடனிருப்போர் பயனடைந்துள்ளனர். அவர்களிடம் இருந்து தமிழ்நாடு மருத்துவ சேவை கழகம் மூலமாக இதுவரையில் Rs.1,01,35, 200/(ரூபாய் ஒரு கோடியே ஒரு லட்சத்து முப்பத்தி ஐந்தாயிரத்து இருநூறு ரூபாய்) படுக்கை கட்டணமாக பெறப்பட்டுள்ளது. இச் சிகிச்சைப் பிரிவில் ஒவ்வொரு அறைகளிலும் உள்ள குளிர் சாதன வசதி, தொலைக்காட்சி, மெத்திருக்கைகளுடன் கூடிய இருக்கைகள், சுடுதண்ணீர்(water Heater) மற்றும் R.O. Water வசதிகளுக்காக மட்டும் கட்ட ணம் வசூலிக்கப்படுகிறது. இதர மருத்துவ பரிசோதனைகள், மருந்துகள், சிகிச்சை களுக்கு தனிக் கட்டணம் ஏதும் கிடையாது.

அரசு இராசாசி மருத்துவமனை முதல்வர் அருள் சுந்தரேஸ்வரர் வழிகாட்டுதலின்படி நிலைய மருத்துவரின் நேரடி மேற்பார்வையில் கட்டண படுக்கை சிகிச்சைப்பிரிவு சிறப்புடன் செயல்பட்டு வருகிறது.

# சிவகங்கை ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம்

சிவகங்கை ஜன.7

சிவகங்கை மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம், மாவட்ட ஆட்சியர் ஆஷா அஜித், தலைமையில் நடைபெற்றது.



மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில், இலவச வீட்டு மனைப் பட்டா, சமூக பாதுகாப்பு திட்டத்தின் கீழ் உதவித் தொகை, மாவட்ட ஊனமுற்றோர் மற்றும் மறுவாழ்வுத்துறை உதவித் தொகை மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கான உபகரணங்கள், புதியமின்னணு குடும்ப அட்டை போன்ற பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி, பொதுமக்களிடமிருந்து 300 மனுக்கள் பெறப்பட்டது. அம்மனுக்களில் தகுதியுடைய மனுக்கள் மீது தனி கவனம் செலுத்தி, விரைந்து நடவடிக்கை எடுக்க சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு மாவட்ட ஆட்சியர் ஆஷா அஜித், அறிவுறுத்தினார்.

மேலும், இக்கூட்டத்தில் பள்ளிக்கல்வித்துறை, மாவட்ட நிர்வாகம் மற்றும் காலநிலை மாற்ற இயக்கம் சார்பில், அனைத்து அரசு தொடக்க / நடுநிலை /உயர்நிலை மற்றும் மேல்நிலைப்பள்ளிகளும் யாவரும் கேளிர் ஹவுஸ் சிஸ்டம் மூலமாக, உலக ஆற்றல் தினத்தை முன்னிட்டு கடந்த 06.12.2024 அன்று பல்வேறு பிரிவுகளில் நடைபெற்ற மாவட்ட அளவிலான ஓவியப்போட்டி, பேச்சுப்போட்டி மற்றும் வினாடி வினா போட்டிகளில் முதல் மூன்று இடங்களில் வெற்றி பெற்ற மாணாக்கர்களுக்கு பரிசு, ஊக்கத்தொகை மற்றும் பாராட்டுச் சான்றிதழ்களையும், கல்லல் மற்றும் காளையார் கோவில் ஊராட்சி ஒன்றியங்களில் சத்துணவு திட்டத்தின் கீழ் பணிபுரிந்து வந்த 02 சத்துணவு ஊழியர்கள் பணியிடை மரணம் காரணமாக, மேற்கண்ட 02 சத்துணவு ஊழியரின் குடும்பத்தினருக்கு கருணை அடிப்படையிலான பணி நியமன ஆணைகளை மாவட்ட ஆட்சியர் வழங்கினார்.

இக்கூட்டத்தில், தேவகோட்டை சார் ஆட்சியர் ஆயுஷ் வெங்கட் வட்ஸ், மாவட்ட வருவாய் அலுவலர் மரு.எஸ். செல்வசுரபி மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் பாலுமுத்து, அரசின் பல்வேறு துறைகளைச் சார்ந்த அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

# பொங்கல் தொகுப்புடன் ஆயிரம் ரூபாய் வழங்கிட வலியுறுத்தி செங்கல்பட்டில் தேமுதிகவினர் ஆர்ப்பாட்டம்

செங்கல்பட்டு ஜன.7

செங்கல்பட்டு மாவட்டம் தமிழக அரசு சார்பில் வழங்கப்படும் பொங்கல் தொகுப்புடன் ஆயிரம்ரூபாய் வழங்கிட வேண்டும், அண்ணாபல்கலைக் கழகத்தில் மாணவிகளுக்கு எதிரான பாலியல் வன்கொடுமையை கண்டித்தும், தமிழகத்தில் மாணவிகள் மற்றும் பெண்களுக்கு உரிய பாதுகாப்பை உறுதி செய்திட வேண்டும், புயல் மழையால் பாதிக்கப்பட்ட மக்கள் மற்றும் விவசாயிகளுக்கு உரிய நிவாரணம் வழங்கிட வேண்டும் கஞ்சா மற்றும் மதுபோதை இல்லாத மாநிலமாக தமிழகத்தை உருவாக்க வேண்டும் உள்ளிட்ட



பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி தமிழகத்தில் பெண்கள் மற்றும் பள்ளி முதல் கல்லூரி வரை மாணவிகளுக்கு பாதுகாப்பு இல்லை என்பதாக குற்றம் சாட்டி தமிழக அரசை கண்டித்து தேசிய முற்போக்கு திராவிட கழகத்தை சேர்ந்த முன்னாள் சட்டமன்ற உறுப்பினரும் செங்கல்பட்டு மாவட்ட கழக செயலாளருமான அனகை முருகேசன் தலைமையில் செங்கல்பட்டு மாவட்ட கழக துணை செயலாளர்கள் மா.செழியன், நாகராஜன் முன்னிலையில் செங்கல்பட்டு பழைய பேருந்து நிலையம் அருகே கண்டன ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டனர். இந்த ஆர்ப்பாட்டத்திற்கு காவல் துறை சார்பில் அனுமதி வழங்காததால் அசம்பாவிதம் ஏதும் நடைபெறாமல் இருக்க ஏராளமான போலீசார் குவிக்கப்பட்டுள்ளனர் இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட பகுதி கழக செயலாளர்கள் மார்க்கெட் ஞானப்பால், அருள், ஆனந்த், வில்சன், சரவணன், மாவட்ட கேப்டன் மன்ற செயலாளர் ஊரப்பாக்கம் எம்.ஜி. மூர்த்தி, மாவட்ட மகளிர் அணி செயலாளர் பார்த்திமா, காட்டாங்குளத்தூர் ஒன்றிய செயலாளர் சக்திவேல், உள்ளிட்ட 200 மேற்பட்டோர் பலர் கலந்து கொண்டு கோஷங்களையும் எழும்பியவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

Printed , published by A.PONRAJ and printed at “SRI SAAI PRINTERS”No.122,Neethipathi,Rajasekaran Street, vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ.8508502161